# 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்பிடித்தலிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் மற்றும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்டம்

**(தமிழ்நாடு சட்ட எண் 19/2007)**

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Fishermen and Laboureres Engaged in Fishing and other Allied Activities (Social Security and Welfare) Act, 2007

**(Tamil Nadu Act No. 19 of 2007)**

(as on 31st October, 2023)

**தமிழாக்கம் :**

**தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்**

**சென்னை**

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்பிடித்தலிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் மற்றும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 19/2007)


| பிரிவு | பொருளடக்கம் |
|---|---|
| 1. | குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம். |
| 2. | பொருள்வரையறைகள். |
| 3. | செயல்திட்டம். |
| 4. | செயல்திட்டத்தின் பொருந்தும் தன்மை தொடர்பான பூசல்கள். |
| 5. | வாரியத்தை நிறுவுதல். |
| 6. | ஒருநபர்வாரியத்தை அமைப்பதற்கான அரசின் அதிகாரம். |
| 7. | வாரியத்தின் அதிகாரங்களும் கடமைகளும். |
| 8. | குழுக்கள். |
| 9. | நிதிக்குப் பங்களிப்பு. |
| 10. | வாரியத்திற்குக் செலுத்தப்படவேண்டிய நிலுவைத் தொகைகளை வசூலித்தல். |
| 11. | கணக்குகளும் தணிக்கையும். |
| 12. | தகுதிக்கேடுகளும் நீக்கமும். |
| 13. | உறுப்பினரின் பதவி விலகல். |
| 14. | காலிப்பணியிடங்களை நிரப்புதல். |
| 15. | காலிப்பணியிடங்களின் காரணமாக நடவடிக்கைகள் செல்லாதவை ஆகாது. |
| 16. | வாரியத்தின் செயல்பாடு பற்றிய விசாரணை. |
| 17. | வாரியத்தினைக் கலைத்துக் கைப்பற்றுதல். |

18. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

19. இணைப்புப் பட்டியலில் திருத்தம் செய்வதற்கான அதிகாரம்.

20. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

21. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

இணைப்புப்பட்டியல்

# 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்பிடித்தலிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் மற்றும் தொழிலாளர்கள்(சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்டம்

## தமிழ்நாடு சட்ட எண் 19/2007

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2007ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 7ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று, பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**மீன்பிடித்தலிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் மற்றும் தொழிலாளர்களின் விரிவான சமூகப் பாதுகாப்பிற்கும் அவர்களின் நலத்தை உறுதி செய்வதற்கும் வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் ஐம்பத்தெட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்டச் சட்டம் பின்வருமாறு:—

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.—** (1) இந்தச் சட்டம், 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்பிடித்தலிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் மற்றும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்டம் என்று வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு, அறிவிக்கையின் மூலமாகக் குறிப்பிடக்கூடிய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள்வரையறைகள்**.– இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(1) "தொடர்புடைய நடவடிக்கைகள்" என்பது, கடற்கரைத் தொழிலாளராக, தோலுரிக்கும் தொழிலாளராக, பதப்படுத்தும் தொழிலாளராக, படகு கட்டும் முற்றத் தொழிலாளராக, வலை பழுதுபார்க்கும் தொழிலாளராக அல்லது தன் பிழைப்பிற்காக சிறிய அளவில் மீன் விற்கும் தொழில் புரிபவராக உள்ள ஒரு நபரின் நடவடிக்கை எனப் பொருள்படும்;

(2)"கடற்கரைத் தொழிலாளர்" என்பது, மீன்பிடித் துறைமுகங்களில் அல்லது மீன்களைக் கரைசேர்க்கும் மையங்களில் அல்லது மீன்களைக் கரையேற்றும் கலங்களில்,–

(a) மீன்பிடி படகுகளிலிருந்து கூடைகளுக்கு இறக்கி வைத்தல்;

(b) மீன் கூடைகளை ஏல இடத்திற்கு அல்லது குளிர வைக்கும் இடத்திற்கு ஏற்றி அனுப்புதல்;

(c) கழிவு மீன் அல்லது சிறிய மீனை பதப்படுத்தும் இடத்திற்கு ஏற்றி அனுப்புதல்;

(d) கரையேற்றும் இடத்தில் மீனைப் பிரித்தல், இறக்கி வைத்தல் மற்றும் பனிக்கட்டியை நொறுக்குதல், பனிக்கட்டி உள்ள பெட்டிகளில் மீனை சிப்பங்கட்டுதல் மற்றும் ஏற்றி அனுப்புவதற்காகப் பயன்படுத்தப்படும் வாகனத்தினுள் சிப்பங்கட்டிய பெட்டிகளை ஏற்றி வைத்தல்;

(e) மீனைகளை நேரடியாக படகுகளிலிருந்து சரக்கு வாகனங்களில் ஏற்றி வைத்தல், மீன்பிடித்

துறைமுகங்களிலும், மீன் கரைசேர்க்கும் மையங்களிலும் பனிக்கட்டி விற்பனை செய்தல்;

(f) ஏல அறையினை சுத்தம் செய்தல், மீன்பிடி கைவினைப் பொருள்கள் மற்றும் மீன்பிடி படகுகளுக்கு நீர் வழங்குதல், போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் ஒரு நபர் எனப் பொருள்படும்,

(3)"வாரியம்" என்பது, பிரிவு 5இன்படி நிறுவப்பட்ட ஒரு வாரியம் எனப் பொருள்படும்;

(4)"படகு கட்டும் முற்றத் தொழிலாளர்" என்பது, நெகிழி நார் வார்ப்புப் படகு மற்றும் மரப்படகுகளைக் கட்டுவதிலும் பழுதுபார்ப்பதிலும் ஈடுபட்டிருக்கும் ஒரு தொழிலாளர் எனப் பொருள்படும்;

(5)"வணிகர்" என்பது, தமிழ்நாடு மாநிலத்திற்குள் மீனை கொள்முதல் செய்கிற அல்லது விற்பனை செய்கிற அல்லது பதப்படுத்துகிற அல்லது மீனைப் பிடித்து கரைசேர்த்த நிலையிலே அல்லது மீன் பொருள்களை பச்சையாகவோ, பதப்படுத்தப்பட்ட வடிவத்திலோ ஏற்றுமதி செய்யும் தொழிலை நடத்தி வருகிற நபர் எவரும் எனப் பொருள்படும், மற்றும்,–

(a) தரகு முகவரை, தரகரை அல்லது எந்தப் பெயராலும் அழைக்கப்படும் பிற வணிக முகவர் எவரையும்; மற்றும்

(b) நிலையான வாழ்விடம் கொண்டிராத ஒரு வணிகரை அல்லது நிலையான வாழ்விடம் கொண்டிராத வணிகரின் ஒரு முகவரை அல்லது தமிழ்நாடு மாநிலத்திற்கு வெளியே அமைந்திருக்கும் நிறுவகம்

அல்லது நிறுமம் அல்லது சங்கம் ஒன்றின் ஒரு வட்டாரக் கிளையை உள்ளடக்கும்;

(6) பதிவு பெற்ற உறுப்பினர் ஒருவரின் "சார்ந்து வாழ்பவர்" என்பது, கீழே குறிப்பிட்டுள்ளபடி அத்தகைய உறுப்பினரின் உறவினர்கள் எவரும் எனப் பொருள்படும்.

(i) மனைவி அல்லது கணவர்;

(ii) குழந்தைகள்;

(iii) கைம்பெண் மற்றும் முன்னரே மரணமடைந்த மகனின் குழந்தைகள்; மற்றும்

(iv) பெற்றோர்கள்.

(7)"வேலைதருபவர்" என்பது, தொழிலாளர்களைப் பணியில் ஈடுபடுத்துகிற நபர் ஒருவர் எனப் பொருள்படும்;

(8)"மீன்" என்பது, இறால், கடல் நண்டு, சிப்பி நண்டு இனம், சிப்பி ஓடு, ஊசிக்கணவாய் மற்றும் உணவின் பொருட்டு அல்லது உரத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளும் பிற நீர்வாழ் உயிரினம் உள்ளிட்ட, வணிகம் சார்ந்த அனைத்து வகையான மீன் எனப் பொருள்படும்;

(9)"மீன் பண்ணை" என்பது, மீன் உற்பத்தி நடத்தப்படும் சுத்தநீர் அல்லது சிறிது உப்பு நீர் அல்லது உப்பு நீர்ப்பகுதி பரவி இருக்கும் நீர் சூழ் நிலப்பகுதி எனப் பொருள்படும்;

(10) "மீன் பொருள்கள்" என்பது, பச்சையாகவோ, பதப்படுத்தப்பட்ட வடிவத்திலோ உள்ள மீன் எனப் பொருள்படும்;

(11) "மீன் வளங்கள்" என்பது, கடல் சார் மீன் வளங்கள், உள்நாட்டு மீன் வளங்கள், சிறிது உப்பான நீர்

மீன் வளங்கள், கடல் நண்டு, நண்டுகள், துடுப்பு மீன், கடற்பாசி, ஈரிதழ் சிப்பி, சிப்பி சீர்படுத்துதல், முத்தெடுத்தல் மற்றும் சங்கு மீன் இனங்கள், இனப்பெருக்கம், மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் பண்ணை அமைத்தல், வண்ண மீன் வளர்ப்பு, கழிவுநீர் மீன் வளர்ப்பு மற்றும் அரசினால் அறிவிக்கப்படக்கூடிய பிற மீன் வளங்கள் எதுவும் எனப் பொருள்படும்;

(12) "மீனவர்" என்பது,–

(i) தன் பிழைப்பிற்காக மீன் பிடித்தல், மீன்களைக் காய வைத்தல், விற்றல் அல்லது பிற தொடர்புடைய பணிகளில் ஈடுபட்டுள்ள;

(ii) 2.5 ஏக்கர் நிலத்திற்கு மேற்படாத மீன் பண்ணையை சொந்தமாகக் கொண்டுள்ள;

(iii) பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றை அதாவது:–

(a) நாட்டுப் படகு; அல்லது

(b) வெளியே பொருத்தக்கூடிய அல்லது 15 குதிரைத் திறனுக்குக் குறைவான திறனுடன் உட்புறமாக பொருத்தக்கூடிய ஒரு நாட்டுப் படகு இயந்திரம்; அல்லது

(c) நன்னீரில் உள்ள பரிசல்,

ஒன்றைச் சொந்தமாக கொண்டுள்ள 18 முதல் 65 வயது வரையிலான நபர் எவரும் எனப் பொருள்படும்;

(13) "நிதி" என்பது, செயல்திட்டம் ஒன்றின்படி நிறுவப்பட்ட தமிழ்நாடு மீன்பிடிப்பிலும் பிற தொடர்புடைய

நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் மற்றும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நல) நிதி எனப் பொருள்படும்;

(14) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(15) "தொழிலாளர்" என்பது, மீன் பிடிப்பதில் அல்லது பிற தொடர்புடைய நடவடிக்கைகளில் அல்லது மீன் வளங்களில் அல்லது மீன் பண்ணைகளில் கூலிக்காக வேலையில் ஈடுபட்டிருக்கும், ஆனால் மீன்பிடிப் படகு எதனையும் சொந்தமாகக் கொண்டிராத 18 முதல் 65 வயது வரையிலான நபர் எவரும் எனப் பொருள்படும்;

(16) "உறுப்பினர் செயலாளர்" என்பது, பிரிவு 5இன்படி அமைக்கப்பட்ட வாரியத்தின் உறுப்பினர் செயலாளர் எனப் பொருள்படும்;

(17) "வலை பழுது பார்க்கும் தொழிலாளர்" என்பது, மீன்பிடி வலைகளைச் சீர் செய்வதில் அல்லது பழுது பார்ப்பதில் ஈடுபட்டுள்ள ஒரு தொழிலாளர் எனப் பொருள்படும்;

(18) "தோலுரிக்கும் தொழிலாளர்" என்பது, இறால், கடல் நண்டு, சிப்பி ஓடு, சிப்பி மீன்கள், கணவாய் மீன்கள், ஆகியவற்றை உரித்தல், தோலுரிக்கும் கொட்டில்கள் மற்றும் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் ஆகியவற்றைச் சுத்தப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கும் ஒரு தொழிலாளர் எனப் பொருள்படும்;

(19) "பதப்படுத்துதல்" என்பது, இரசாயன, பௌதிக, மாற்றங்களுடனோ, இல்லாமலோ இயந்திர முறையில் அல்லது பிறமுறையில் மீன் அல்லது மீன் பொருட்களின் தன்மை மாறாது இருக்கச் செய்யும் அல்லது

அனுப்பப்படும்போது எவ்வித குறைபாடும் ஏற்படாது தடுத்து அல்லது மதிப்புக் கூட்டி மீன் பொருள்களைப் பாதுகாக்கும் முறை எதுவும் எனப் பொருள்படும்;

(20) "பதப்படுத்தும் தொழிலாளர்" என்பது, மீனை அல்லது மீன் பொருள்களை சுத்தப்படுத்துதல், பிரித்தல், பதப்படுத்துதல் மற்றும் சிப்பங்கட்டுதல் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கும் ஒரு தொழிலாளர் எனப் பொருள்படும்;

(21) "பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்" என்பது, செயல்திட்டம் ஒன்றின்கீழ் ஓர் உறுப்பினராக பதிவு செய்யப்பட்டு மீன்பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள மீனவர் மற்றும் தொழிலாளர்கள் எனப் பொருள்படும்;

(22) "இணைப்புப்பட்டியல்" என்பது, இச்சட்டத்திற்கான இணைப்புப்பட்டியல் எனப் பொருள்படும்;

(23) "செயல்திட்டம்" என்பது, இந்தச் சட்டத்தின்படி அரசினால் ஏற்படுத்தப்பட்ட செயல்திட்டம் ஒன்று எனப் பொருள்படும்;

(24) "சிறிய அளவில் மீன் விநியோகம் செய்பவர்" என்பது, ஒரு ஆண்டிற்கு நூற்றி இருபது நாட்களுக்குக் குறையாத ஒரு காலஅளவிற்கு மீன் இறங்கு தளங்களிலிருந்து, துறைமுகங்களிலிருந்து, மீன்பிடி அல்லது மீன் பதப்படுத்தும் முற்றங்களிலிருந்து, அல்லது சந்தைகளிலிருந்து மையங்கள் மூலமாக அல்லது வீட்டு விநியோகம் மூலமாக மீன் விற்பனை செய்வதில் ஈடுபட்டிருக்கும் நபர் எவரும் எனப் பொருள்படும்; மற்றும்,—

(a) மூன்று சக்கர வாகனத்தில் கொண்டு சென்று விநியோகம் செய்பவர்;

(b) மிதிவண்டி சுமை விற்பனையாளர்கள்;

(c) நிலையான அடிப்படையில் மீன் ஏற்றிச் செல்வதில் ஈடுபட்டிருக்கும் ஓட்டுநர்கள் மற்றும் வாகனத்தைச் சுத்தப்படுத்துபவர்கள்;

(d) தற்காலிக முகாம்களில் மீன் விற்பனை செய்யும் வியாபாரிகள், உள்ளிட்ட தலைச்சுமை வியாபாரிகள்;

(e) சிறு சரக்கு வாகனத்தில் (mini lorry) செல்லும் விற்பனையாளர்கள்; மற்றும்

(f) இரு சக்கர மின்விசை வண்டியில் செல்லும் விற்பனையாளர்கள் ஆகியோரை உள்ளடக்கும்.

3. **செயல்திட்டம்.**– (1) அரசு, அறிவிக்கையின் மூலமாக, ஒரு செயல்திட்டத்தில் வகை செய்யப்படக்கூடிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு உறுப்பினர்களைப் பதிவு செய்வதற்கு வகை செய்யலாம் மற்றும் மீனவரின் மற்றும் மீன்பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பையும் நலத்தையும் உறுதி செய்யும் நோக்கத்திற்கான வகைமுறைகளைச் செய்யலாம்.

(2) அதன் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்குப் பின்வரும் விவரங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் ஏதொன்றையும் பொறுத்த அளவில் தீர்வழி (நிவாரணம்) அல்லது நிகழ்விற்கேற்ப, உதவியானது, இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும், அதாவது:–

(a) இறப்பு மற்றும் உடற்காய விபத்திற்கான தீர்வழி (நிவாரணம்);

(b) மீன் பிடிக்கையில் காணாமல் போன மீனவர்கள்;

(c) மீன் பிடிக்கையிலோ அதற்குப் பின்போ விபத்து காரணமாக இல்லாமல் பிறவாறு இறக்கின்ற;

(d) இயற்கையான இறப்பு;

(e) ஈமச் சடங்குக்கான செலவுகள்;

(f) குழந்தைகளின் கல்வி;

(g) திருமணம்;

(h) மகப்பேறு அல்லது கருச்சிதைவு அல்லது கருக்கலைப்பு;

(i) முதியோர் ஓய்வூதியம்.

(3) அரசானது, வாரியத்துடன் ஆலோசனை செய்து அறிவிக்கையின் மூலமாக, மேலே சொல்லப்பட்ட செயல்திட்டத்தின் வகைமுறைகளோடு மேலும் வகைமுறைகளைச் சேர்க்கலாம் அல்லது அதனால் செய்யப்பட்ட திட்டம் எதற்குமான வகைமுறைகள் அனைத்தையுமோ ஏதொன்றையுமோ திருத்தலாம் அல்லது மாற்றியமைக்கலாம் அல்லது அதனால் ஏற்படுத்தப்பட்ட திட்டம் எதற்கும் பதிலாக பிற திட்டம் அல்லது அவற்றுள் மற்றொரு திட்டத்தை ஏற்படுத்தலாம்.

**4. செயல்திட்டத்தின் பொருந்தும் தன்மை தொடர்பான பூசல்கள்.–** மீனவரின் அல்லது மீன் பிடிப்பதிலும் பிற தொடர்புடைய செயல்திட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வகை எதற்கும் திட்டம் எதுவும் பொருந்துகிறதா என்பது

குறித்து ஏதேனும் வினா எழுமானால், இந்த விவரமானது இதன்பொருட்டு வகுத்துரைக்கப்படும் அத்தகைய அதிகார அமைப்பிற்குக் குறிப்பிட்டு அனுப்பப்படுதல் வேண்டும் மற்றும் அந்த அதிகாரஅமைப்பின் முடிவே இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

5. **வாரியத்தை நிறுவுதல்.–** (1) அரசு, அறிவிக்கை மூலமாக, ஒரு செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்காகவும், நிருவகிப்பதற்காகவுமான அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் பெயரால் அறியப்படும் வாரியம் ஒன்றை நிறுவலாம்.

(2) வாரியம், மேற்சொல்லப்பட்ட பெயரில் ஒரு கூட்டுருமமாக இருத்தல் வேண்டும் நிலையான தொடர் வழியுரிமையையும் பொது இலச்சினையும் பெற்றிருப்பதோடு, சொத்துக்களை ஈட்டுவதற்கும், வைத்து வருவதற்கும் தீர்வு செய்வதற்கும், ஒப்பந்தம் செய்வதற்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் மற்றும் அதன் பெயரில் வழக்கிடலாம் அல்லது வழக்கிடப்படலாம்.

(3) வாரியம், மீன் பிடிப்பதிலும் மற்றும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்ற மீனவர் மற்றும் தொழிலாளர்களை பிரதிநிதித்துவம் செய்கிற வகையில் அரசால், அவ்வப்போது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் அவர்களுள், அரசு மீன்வள அலுவலக இயக்குநர், வாரியத்தின் உறுப்பினர் செயலாளராக இருத்தல் வேண்டும்.

(4) வாரியத்தின் தலைவர், அரசினைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காகப் பெயர்குறித்து

நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கிடையே இருந்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) தலைவர் உள்ளிட்ட, வாரியத்தின் அனைத்து உறுப்பினர்களும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பின்னர், அரசானது, அறிவிக்கையின் மூலமாக, வாரியத்தின் அனைத்து உறுப்பினர்களின் பெயர்களையும் வெளியிடுதல் வேண்டும்.

(6) வாரியத்தின் உறுப்பினர்களின் பதவிக் கால அளவானது வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

(7) வாரியத்தின் கூட்டங்கள் மற்றும் இந்த நோக்கத்திற்காக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் அதனுடன் நிறைவு செய்வதற்கான அல்லது அதற்கு துணையான விவரங்கள் அனைத்தையும் அரசின் ஒப்புதலுக்கு உட்பட்டு, வாரியம் தானே ஒழுங்குப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**6. ஒருநபர்வாரியத்தை அமைப்பதற்கான அரசின் அதிகாரம்.–** (1) எந்தக் காரணத்திற்காகவும், பிரிவு 5இன் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில், வாரியம் ஒன்றை நிறுவுவதற்கு இயலவில்லை என அரசுக்குத் தோன்றுமானால், அரசானது, அறிவிக்கையின் மூலமாக, பிரிவு 5இன்படி, உரிய வாரியம் ஒன்று நிறுவப்படுகிற வரையில், பதவியில் இருக்கும் நபர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், அப்போதைக்கு, வாரியமாக அமைத்துருவாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தினால் அல்லது அதன் வழியாகவோ, வாரியத்திற்கு வழங்கப்பட்ட

அதிகாரங்களைச் செலுத்தி விதிக்கப்பட்ட கடமைகள் அனைத்தையும் நிறைவேற்றி அலுவல்கள் அனைத்தையும் ஆற்றுதல் வேண்டும். அந்த வாரியத்தின் முதல் கூட்டத் தேதிக்கு அடுத்து முந்தைய தேதி வரையில் அவர் தொடர்ந்து பதவியில் இருத்தல் வேண்டும்.

(3) வாரியத்தை அமைக்கும் நபர், வாரியத்தின் நிதியிலிருந்து அத்தகைய ஊதியத்தொகையைப் பெறுவார் மற்றும் பணிவரையறைகளும் பிற நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

7. **வாரியத்தின் அதிகாரங்களும் கடமைகளும்.**– (1) வாரியமானது, செயல்திட்டம் ஒன்றை நிருவகிப்பதற்கு பொறுப்புடையதாகும் மற்றும் அந்தச் செயல்திட்டத்தினால் அதன்பேரில் வழங்கப்படக்கூடிய அதிகாரங்களைச் செலுத்துதலும் செயற்பணிகளைப் புரிதலும் வேண்டும்.

(2) வாரியமானது, அந்தச் செயல்திட்டத்தை நிருவகிப்பதற்குத் தக்கது எனத் தாம் கருதுகிற நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(3) வாரியமானது, அந்த ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளன்று முடிவடைகின்ற முந்தைய ஆண்டின் போதான செயல்திட்டத்தின், செயல்பாடுகளின் பேரிலான ஆண்டு அறிக்கையை ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதம் முதலாம் நாளுக்குப் பின்னர், கூடிய விரைவில், அரசுக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட அறிக்கை ஒவ்வொன்றும் பெறப்பட்டதற்குப் பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்தால், அந்தக் கூட்டத் தொடரிலேயோ அல்லது அந்த அறிக்கை பெறப்பட்ட தேதியிலிருந்து அடுத்தும் வரும் கூட்டத்

தொடரிலேயோ சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

(4) வாரியமானது, பங்களிப்புகள் அனைத்தையும் பெற்று செயல்திட்டத்தின் நோக்கங்களை அடைவதன் பொருட்டு, அது தக்கது எனக் கருதக்கூடிய முறையில் அத்தகைய பங்களிப்புகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(5) அதிகாரங்களைச் செலுத்துவதிலும், அதன் செயற்பணிகளைப் புரிவதிலும் வாரியமானது, அவ்வப்போது எழுத்து வடிவில் கொடுக்கக்கூடிய காரணங்களுக்காக, அரசின் அத்தகைய பணிப்புரைகளுக்குக் கட்டுபட்டிருத்தல் வேண்டும்.

8. **குழுக்கள்.–** (1) அரசானது, ஆணையின் மூலமாக, வாரியத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு மாவட்ட அளவிலான, வட்ட அளவிலான அல்லது கிராம அளவிலான குழுக்களை அமைத்துருவாக்கலாம்; அத்தகைய குழுக்களில் அரசினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் தலைமை ஏற்க வேண்டும்.

(2) அக்குழுவானது, அந்தச் செயல்திட்டத்தில் குறிப்பிடப்படும் அல்லது அவ்வப்போது வாரியத்தால் ஒப்படைக்கப்படும் அதிகாரங்களைப் பெற்றிருப்பதோடு, அத்தகைய கடமைகளை ஆற்றுதலும் வேண்டும்.

9. **நிதிக்குப் பங்களிப்பு.–** (1) செயல்திட்டம் ஒன்றின்படி தமிழ்நாடு மீன் பிடித்தலிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் மற்றும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு நல) நிதி என்ற பெயரிலும் முறையிலும் நிதி ஒன்று அமைத்துருவாக்கப்படுதல் வேண்டும் மற்றும் உட்பிரிவு

(3)இல் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் வருவாய் ஆதாரங்களில் பெறப்பட்ட பணத்தொகைகள் அனைத்தும் அத்தகைய நிதியில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) வாரியமானது, அத்தகைய நிதியை தேசிய வங்கிகள் ஏதொன்றிலுமோ அல்லது தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டிலும் மேற்பார்வையின் கீழும் உள்ள கூட்டுறவு வங்கிகள் ஏதொன்றிலுமோ அல்லது அவ்வப்போது அரசு ஒப்புதலுடன் வாரியத்தால் முடிவு செய்யப்படக்கூடிய பிற வங்கி எதிலுமோ வைத்திருத்தல் வேண்டும். அத்தகைய கணக்கானது வாரியத்தின் கையொப்பமிடுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டவர்களுள் எவரேனும் இருவரால் கூட்டாக செயற்படுத்தப்படுதல் வேண்டும் அவர்களுள் ஒருவர் உறுப்பினர் செயலாளராக இருத்தல் வேண்டும்.

(3) நிதிக்கு அளிக்கப்பட்ட பங்களிப்புகள், உட்பிரிவு (4)இல் குறிப்பிடப்பட்ட வருவாய் ஆதாரங்களிலிருந்தும் அரசிடமிருந்தும் அந்தத் திட்டத்தில் குறிப்பிடப்படும் பிற வருவாய் ஆதாரங்களிருந்தும் வகை செய்யப்படுதல் வேண்டும்.

(4) நிதிக்கான பங்களிப்பானது,–

(i) ஒவ்வொரு ஆண்டுக்கும் வாரியத்தின் பரிந்துரையின் பேரில்;

(a) ஒவ்வொரு மீனவர்;

(b) ஒவ்வொரு தொடர்புடைய தொழிலாளர்;

(c) எந்த வகையிலுமான மீன்பிடிக்கும் இயந்திர படகு ஒன்றின் உரிமையாளர்;

(d) வலை செய்யும் தொழிற்சாலை மற்றும் மீன்தீனி உற்பத்திப் பிரிவின் உரிமையாளர்;

(e) இறால் வளர்ப்பு பண்ணையின் அல்லது ஒரு மீன் பண்ணையின் உரிமையாளர்,

ஆகியோர்களிடமிருந்து அரசினால் அவ்வப்போது நிர்ணயிக்கக்கூடிய வீதத்தில்;

(ii) ஒவ்வோர் ஆண்டிற்குமான வணிகரின் விற்பனை வருமானத்தின் ஒரு விழுக்காடு;

(iii) வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு மாநில வரையறுக்கப்பட்ட தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மற்றும் அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தனியார் டீசல் விற்பனையகங்கள் ஆகியவற்றால் விற்பனை செய்யப்பட்ட டீசலில் லிட்டருக்கு [1][10 பைசா வீதத்தில்].

(iv) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திலிருந்து அல்லது (வரையறுக்கப்பட்ட) தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்திலிருந்து மற்றும் அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தனியார் டீசல் விற்பனையகங்களிலிருந்து இயந்திரப்படகு உரிமையாளர்களால் விலைக்கு வாங்கப்பட்ட வரியில்லா டீசலில் [1][லிட்டருக்கு 20 பைசா வீதத்தில்.]

(v) வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் உள்ள நீர்த்தேக்கங்களின்

---

1. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்பிடிப்பதிலும், பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் மற்றும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண்.21/2019) பிரிவு 2ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

கட்டுப்பாட்டின் கீழ் குத்தகைக்கான குத்தகைத் தொகையின் [1][ஏழு விழுக்காடு வீதத்தில்.]

(vi) வருவாய், இந்து சமய மற்றும் அறநிலை கட்டளைகள், [2][பொதுப்பணிகள், மீன்வளம் மற்றும் வனத்துறைகள்] மற்றும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகள் ஆகியவற்றிலுள்ள அந்தந்த அதிகாரஅமைப்புகளினால் வசூலிக்கப்பட்ட மீன் பிடிப்பதற்கான குத்தகைத் தொகையின் [1][ஏழு விழுக்காடு வீதத்தில்]

(vii) [1][தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களால் ஒவ்வொரு ஆண்டிற்கும் உறுப்பினர் ஒருவருக்கு இருபது ரூபாய் என்ற வீதத்தில்.]

(viii) மேட்டூர் அணை கூட்டுறவு மீன் வாணிப சங்கத்தினால் விற்பனை செய்யப்பட்ட மீனின் ஒவ்வொரு கிலோ கிராமுக்கும் [1][இரண்டு ரூபாய் என்ற வீதத்தில்]

இருத்தல் வேண்டும்:

---

1. 2019ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்பிடிப்பதிலும், பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் மற்றும் தொழிலாளர்கள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண்.21/2019) பிரிவு 2ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

2. 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்பிடிப்பதிலும், பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் மற்றும் தொழிலாளர்கள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண்.16/2014) பிரிவு 2ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

(5) அரசானது, வாரியத்துடன் கலந்தாய்வு செய்து, வசூலிக்கப்பட வேண்டிய பங்களிப்பு விகிதத்தை மறு பரிசீலனை செய்யலாம்.

(6) உட்பிரிவு (4)இல் குறிப்பிடப்பட்ட நிதிக்கான பங்களிப்பானது, வகுத்துரைக்கப்படும் காலத்திற்குள்ளும் முறையிலும் செலுத்தப்படுதல் வேண்டும்.

(7) அந்தச் செயல்திட்டத்திற்கான நிருவாகத்தில் எழக்கூடிய எதிர்பாராத செலவினங்கள் உள்ளிட்ட, அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அனைத்துச் செலவினங்களும் அந்த நிதியிலிருந்து எதிர்கொள்ளப்படுதல் வேண்டும்.

**10. வாரியத்திற்குச் செலுத்தப்படவேண்டிய நிலுவைத் தொகைகளை வசூலித்தல்.–** இந்தச் சட்டத்தின்கீழ் அல்லது அந்தச் செயல்திட்டத்தின் கீழ் வாரியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை எதனின் நிலுவையையும் வசூலிப்பதற்காக வாரியத்தால் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் பேரிலும் அத்தகைய நிலுவைகள் தொடர்பாகக் கணக்கு விவரவுரை ஒன்றை அளிப்பதன் பேரிலும், மாவட்ட ஆட்சியர் அவர் தக்கது எனக் கருதுகிற விசாரணைகளைச் செய்த பின்னர், வரவேண்டிய நிலுவையாக, அதில் குறிப்பிடப்பட்ட தொகையைத் திரும்பப் பெறுவதற்கானச் சான்றிதழ் ஒன்றை வழங்கலாம்.

(2) வரவேண்டிய நிலுவைத் தொகையைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழானது, முடிவானதாகவும் இறுதியானதாகவும் இருத்தல் வேண்டும். கொடுக்கப்பட வேண்டிய தொகையாக அதில் சொல்லப்பட்ட நிலுவைகளை நில

வருவாய் நிலுவையைப் போன்றே கருதி, மாவட்ட ஆட்சியரால் வசூலிக்கப்பட்டு வாரியத்திடம் செலுத்தப்படுதல் வேண்டும்.

**11. கணக்குகளும் தணிக்கையும்.–** (1) வாரியமானது, முறையான கணக்குகளையும் பிற தொடர்புடைய பதிவுருக்களையும் பேணிவருதல் வேண்டும்; மற்றும் அது வகுத்துரைக்கப்படும் படிவத்தில் ஐந்தொகைக் (இருப்பு நிலை) குறிப்பேடு உள்ளிட்ட ஆண்டுக் கணக்கு விவரவுரை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(2) வாரியத்தின் கணக்குகள், இது குறித்து அரசு நியமிக்கக்கூடிய அத்தகைய தகுதி வாய்ந்த நபரால், ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(3) தணிக்கையாளர், அனைத்து நியாயமான நேரங்களிலும், வாரியத்தின் கணக்குப் புத்தகங்களையும் பிற ஆவணங்களையும் பார்வையிடுவதற்கு அணுகுரிமை பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் அந்தத் தணிக்கை நோக்கங்களுக்காகத் தமக்குத் தேவையாக இருக்கக்கூடிய விளக்கங்களையும் தகவல்களையும் கோரிப் பெறலாம் அல்லது வாரியத்தின் உறுப்பினர் அல்லது அலுவலர் எவரையும் விசாரிக்கலாம்.

(4) தணிக்கையாளரால், சான்றளிக்கப்பட்ட வாரியத்தின் கணக்குகள் அந்தத் தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து இது குறித்து அரசு குறிப்பிடப்படும் தேதிக்கு முன்பாக ஆண்டுதோறும் அரசுக்கு மேலனுப்புதல் வேண்டும்.

(5) வாரியமானது, தணிக்கையாளர்களின் அறிக்கையைப் பார்வையிட்ட பின்னர், அரசானது

பிறப்பிக்கக் கருதும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

(6) தணிக்கைக்கான செலவு, வாரியத்தின் நிதியிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

12. **தகுதிக்கேடுகளும் நீக்கமும்.–** (1) நபர் எவரும்,–

(a) வாரியத்தின் சம்பளம் பெறும் அலுவலராக இருப்பார் என்றால்; அல்லது

(b) நொடித்தவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பார் என்றால் அல்லது எப்போதாவது நொடித்தவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்திருப்பார் என்றால்; அல்லது

(c) பித்தராகக் காணப்பட்டால் அல்லது பித்து நிலையுள்ளவர் என்றால்; அல்லது

(d) ஒழுக்கக்கேடு உள்ளிட்ட குற்றச்செயல் எதற்காகவும் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் அல்லது வழங்கப்பட்டிருப்பார் என்றால்,

அவர் வாரியத்தின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுதலோ அல்லது உறுப்பினராகத் தொடர்ந்து இருத்தலோ கூடாது.

(2) அரசானது,–

(a) உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட தகுதிக்கேடுகளில் எதற்கும் உட்பட்டுள்ள அல்லது உள்ளாகி இருக்கிற உறுப்பினரை; அல்லது

(b) தொடர்ந்தாற்போல் வாரியத்தின் மூன்றிற்கு மேற்பட்ட கூட்டங்களுக்கு வாரியத்தின் அனுமதியில்லாமல் வராது இருக்கிற,

உறுப்பினரைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

13. **உறுப்பினரின் பதவி விலகல்.–** வாரியத்தின் உறுப்பினர் எவரும், எந்த நேரத்திலும், அரசுக்கு

முகவரியிட்டுத் தன் கைப்பட எழுதி தம் பதவியை விட்டு விலகலாம். அரசால் அப்பதவி விலகல் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பேரில், அவரது பதவி முடிவுக்கு வருதல் வேண்டும்.

**14. காலிப்பணியிடங்களை நிரப்புதல்.–** வாரியமானது, இறப்பு, விலகல், தகுதிக்கேடு அல்லது நீக்கம் அல்லது பிற காரணத்தினால் ஏற்படும் காலிப்பணியிடம் எதையும் பொறுத்த நிகழ்வில் அவ்வாறு ஏற்பட்ட காலிப்பணியிடத்தைப் பற்றி அரசுக்கு உடனே தெரிவித்தல் வேண்டும். அந்தக் காலிப்பணியிடம் ஏற்பட்ட தொண்ணூறு நாட்களுக்கு மிகாமல், அப்பணியிடம் நிரப்பப்படுதல் வேண்டும். அந்தக் காலிப்பணியிடத்தை நிரப்புவதற்காகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் அந்தக் காலிப்பணியிடம் ஏற்படாதிருந்தால், எவருடைய காலிப்பணியிடத்தில் அவர் நியமிக்கப்பட்டாரோ, அவர் பதவி வகிக்கக்கூடிய காலஅளவு வரையில் புதிதாக நியமிக்கப்பட்டவர் பதவி வகித்தல் வேண்டும்:

**வரம்புரை:** அத்தகைய காலிப்பணியிடம் உள்ளபோது, தொடர்ந்திருக்கும் உறுப்பினர்கள் காலிப்பணியிடம் எதுவும் ஏற்படாதது போன்றே செயல்படலாம்.

**15. காலிப்பணியிடங்களின் காரணமாக நடவடிக்கைகள் செல்லத்தகாதவை ஆகாது.–** வாரியத்தின் செயல்பாடு அல்லது நடவடிக்கைகளை, அதன் உறுப்பினர் பதவி எதுவும் காலியாக உள்ள காரணத்தால் அல்லது அதனை அமைத்துருவாக்கிய முறையில் உள்ள குறைபாடு காரணத்தால் மட்டுமே, வினவப்படுதலோ அல்லது செல்லத்தகாததாகவோ ஆக்கப்படுதலோ கூடாது.

**16. வாரியத்தின் செயல்பாடு பற்றிய விசாரணை.–** (1) அரசு, எந்நேரத்திலும் வாரியம் அல்லது செயல்திட்டத்தின் செயல்பாடு பற்றி புலனாய்வு செய்வதற்கோ அல்லது விசாரணை செய்வதற்கோ, நபர் எவரையும் நியமிக்கலாம் மற்றும் அதன் அறிக்கை ஒன்றை அரசுக்குப் பணிந்தனுப்பலாம்.

(2) வாரியம், அவ்வாறு அமர்த்தப்பட்ட நபருக்கு புலனாய்வு அல்லது விசாரணையைச் சரியாக நடத்துவதற்கான அனைத்து வசதிகளையும் செய்தல் வேண்டும் மற்றும் அவர், கோருகின்ற வாரியத்தின் வசமுள்ள ஆவணங்கள், கணக்குகள் அல்லது தகவல்களை அவருக்கு அளித்தல் வேண்டும்.

17. **வாரியத்தினைக் கலைத்துக் கைப்பற்றுதல்.–** அரசானது, பிரிவு 16இன் உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட அறிக்கையைப் பரிசீலினை செய்ததன் பேரிலோ அல்லது பிறவாரோ,–

(a) வாரியம் அதன் அலுவல் பணிகளை நிறைவேற்ற இயலவில்லை என்றோ, அல்லது

(b) வாரியம், அதன் அலுவல் பணிகளை புரிவதில் இடைவிடாது தவறிழைக்கிறது அல்லது அதன் அதிகார வரம்பை மீறுகிறது அல்லது அதன் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துகிறது என்று கருதினால், அரசு, அறிவிக்கை மூலமாக வாரியத்தை கலைத்துக் கைப்பற்றலாம் மற்றும் கலைத்துக் கைப்பற்றப்பட்ட தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதக் கால அளவிற்குள் வகுத்துரைக்கப்பட்ட முறையில், மாற்றியமைக்கலாம். கலைத்து கைப்பற்றப்பட்ட காலஅளவானது, அறிவிக்கை

ஒன்றால் போதிய காரணங்களுக்காக ஆறு மாதங்களுக்கு மிகாத காலஅளவிற்கு நீட்டிக்கப்படலாம்:

**வரம்புரை:** இந்த உட்பிரிவின்படி கூறு (b)இல் குறிப்பிடப்பட்ட காரணங்கள் எதன் பேரிலும், அறிவிக்கை ஒன்றை வெளியிடும் முன்பு, அரசு, வாரியத்துக்கு, அது ஏன் கலைத்து மாற்றியமைக்கப்படக்கூடாது என்பதற்கான காரணம் காட்டுமாறு நியாயமான வாய்ப்பு ஒன்றினை வழங்குதல் வேண்டும் மற்றும் வாரியம், விளக்கம் அளித்தாலும் அல்லது மறுப்புரைகளைச் சமர்ப்பித்தாலும் அதனைப் பரிசீலனை செய்தல் வேண்டும்.

(2) வாரியம் கலைத்துக் கைப்பற்றப்பட்ட பின்னர், அது மறுபடியும் அமைத்துருவாக்கப்படும் வரையில், இச்சட்டத்தின்படி வாரியத்தின் அதிகாரங்கள், கடமைகள், அலுவல்பணிகள் அரசால் அல்லது இந்த நோக்கத்திற்காக அரசால் அமர்த்தப்படும் அலுவலர் அல்லது அலுவலர்களால் செலுத்தி வரப்படுதலும் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

(3) வாரியம், கலைத்துக் கைப்பற்றப்பட்டபோது, பின்வரும் விளைவுகள் வாரியத்திற்கு வரும், அவையாவன:–

(a) வாரியத்தின் உறுப்பினர்கள் அனைவரும் உட்பிரிவு (1) இன்படி அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து, பதவியை விட்டு விலகுதல் வேண்டும்;

(b) வாரியத்தால் செலுத்தப்பட்ட அனைத்து அதிகாரங்களும் அல்லது ஆற்றப்பட்ட அனைத்து அலுவல் பணிகளும் அது கலைத்துக் கைப்பற்றப்பட்ட காலஅளவின்போது அந்த அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட விதத்தில் அரசால் அல்லது அலுவலர்

அல்லது அலுவலர்களால் செலுத்தப்படுதலும் ஆற்றப்படுதலும் வேண்டும்;

(c ) வாரியம் கலைத்துக் கைப்பற்றப்பட்ட காலஅளவின்போது, அதற்கு உரித்தான நிதிகள் மற்றும் பிற சொத்துக்கள் அனைத்தும் அரசிடம் வந்தடைதல் வேண்டும் மற்றும் வாரியம் மீண்டும் திருத்தியமைக்கப் பட்டதன்பேரில், அத்தகைய நிதிகளும் சொத்துக்களும் மீண்டும் வாரியத்திற்கு உரியதாக வேண்டும்.

18. **நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.–** இந்தச் சட்டத்தின் படியோ அல்லது செயல்திட்டம் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதன்படியோ, நல்லெண்ணத்தில் செய்யப்படும் அல்லது செய்யக் கருதப்படும் ஏதொன்றிற்காகவும், அரசு அல்லது வாரியம் அல்லது தலைவர் அல்லது உறுப்பினர் செயலாளர் அல்லது வாரியத்தின் உறுப்பினர் அல்லது குழுவின் உறுப்பினர் அல்லது வாரியத்தின் பிற அலுவலர்கள் எவருக்கும் எதிராக உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எதுவும் தொடரப்படுதல் கூடாது.

19. **இணைப்புப்பட்டியலில் திருத்தம் செய்வதற்கான அதிகாரம்.–** அரசு, அறிவிக்கை மூலமாக இணைப்புப்பட்டியலில் எதனையும் சேர்க்கவோ அல்லது மாற்றவோ செய்யலாம்.

20. **விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.–** (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது எதனையுமோ நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2)(a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு குறிப்பிட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று கூறப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் ஒரு குறிப்பிட்ட நாளில் அவை நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று கூறப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை, அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட பின்னர், கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடரிலோ அல்லது அடுத்த கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு, சட்டமன்றப் பேரவை அத்தகைய விதி, ஆணை அல்லது அறிவிக்கையில் மாற்றம் எதையும் செய்யுமானால் அல்லது சட்டமன்றப் பேரவை அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படக்கூடாது அல்லது பிறப்பிக்கக்கூடாது என்று முடிவு செய்யுமானால், அதற்குப் பின்பு அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை அவ்வாறு மாற்றப்பட்ட வடிவில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது அது நடைமுறைக்கு வராது வேண்டும். எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம்

எதுவும், அந்த விதி அல்லது அறிவிக்கையின்படி அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**21. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, ஆணை மூலமாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத, அந்த இடர்ப்பாட்டை நீக்கும் நோக்கத்திற்குத் தேவையானது அல்லது உகந்தது எனத் தோன்றும் எதையும் செய்யலாம்:

**வரம்புரை:** அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலஅளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதல் கூடாது.

## இணைப்புப்பட்டியல்

## பிரிவு 3 (2) ஐக் காண்க.

| வ. எண். (1) | நிவாரணம் அல்லது உதவி (2) | தொகை (ரூபாயில்) (3) |
|---|---|---|
| 1 | விபத்து தீர்வழி (நிவாரணம்)<br>(a) விபத்தினால் மரணம் | [1][2,00,000] |
| | (b) இரண்டு கைகள் இழப்பு | 1,00,000 |
| | (c) இரண்டு கால்கள் இழப்பு | 1,00,000 |
| | (d) ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு | [1][1,00,000] |
| | (e) இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு | 1,00,000 |
| | (f) ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | 1,00,000 |
| | (g) மேலே கண்ட இனங்களில் குறிப்பிடப்படாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு | [1][50,000] |
| 2 | விபத்தின் காரணமாக அல்லாமல் மீன் பிடிக்கையில் அல்லது அதற்குப் பின்பு உடனடியாக இறத்தல் | 2,00,000 |
| 3 | மீன் பிடிக்கையில் காணாமல்போன மீனவர் | [1][2,00,000] |
| 4 | இயற்கை மரணம் | [2][15,000] |
| 5 | ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை | 2,500 |

---

1. அரசாணை (நிலை) எண். 184 கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, நாள் 27.09.2018 ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

2. தமிழ்நாடு அரசிதழ் அறிவிக்கை எண். 48 , நாள்11.12.2013 ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

| 6 | உறுப்பினரின் மகன் அல்லது மகள் கல்வி உதவித் தொகை | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்கி படிப்பவர் | |
|---|---|---|---|---|---|
| | | மாணவர் | மாண–வியர் | மாணவர் | மாணவியர் |
| | a) பத்தாம் வகுப்பு | 1,250 | 1,500 | --- | --- |
| | b) பன்னிரெண்–டாம் வகுப்பு தேர்ச்சி | 1,750 | 2,000 | --- | --- |
| | c) தொழிற்பயிற்சி (I.T.I) அல்லது பல்தொழில் நுட்ப பயிற்சி (Polytechnic) (ஆண்டு ஒன்றிற்கு) | 1,250 | 1,750 | 1,450 | 1,950 |
| | d) இளங்கலை பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு) | 1,750 | 2,250 | 2,000 | 2,500 |
| | e) முதுகலை பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு) | 2,250 | 2,750 | 3,250 | 3,750 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | f) தொழில் கல்வி பாடப்பிரிவுகள் (சட்டம், பொறியியல், மருத்துவம் போன்றவை) (ஆண்டு ஒன்றிற்கு) | 2,250 | 2,750 | 4,250 | 4,750 |
| | g) முதுகலை தொழில் கல்வி பாடப்பிரிவுகள் (ஆண்டு ஒன்றிற்கு) | 4,250 | 4,750 | 6,250 | 6,750 |
| 7 | திருமண உதவி<br>a) உறுப்பினரின் திருமணம்<br>(i) ஆண்<br>(ii) பெண் | <br><br>3,000<br>5,000 | | | |
| | b) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம்<br>(i) ஆண்<br>(ii) பெண் | <br>3,000<br>5,000 | | | |
| 8 | மகப்பேறு அல்லது கருச்சிதைவு | | | | |

| | | |
|---|---|---|
| | அல்லது கருக்கலைப்பு உதவித்தொகை<br><br>(i) மகப்பேறு<br><br>(ii) கருச்சிதைவு<br><br>(iii)கருக்கலைப்பு | 6,000<br><br>(மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் ஆறு மாதங்களுக்கு)<br>3,000<br><br>3,000 |
| 9 | முதியோர் ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு). | 400 |